IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.
OS No.168/2023

| | | |
|---|---|---|
| Name | : Chokkammal | **P.W.1** |
| Father/Husband Name | : Veerabathiran | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : 03.-03-2025 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.03.2025.

**<u>குறுக்கு விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.</u>**

1. நான் எந்த ஊரில் வசித்து வருகிறேன் என்றால் கரும்பபாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். கதவு எண் எனக்கு ஞாபகம் இல்லை. மறந்து விட்டேன். தெரு பெயர் என்ன என்றால் முத்துமாரியம்மன் கோவில் தெரு. நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வீட்டில் குப்பை போட்டும் தகராறு செய்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் வீட்டின் உடைய அகலம் என்ன என்றால் எனக்கு குறிப்பிட்டு தெரியாது. எத்தனை சென்ட் நிலம் என்றால் 5 சென்ட். பிரதிவாதிகளுக்கு எத்தனை சென்ட் நிலம் என்றால் அவர்களுக்கு எந்த உரிமையியும் இல்லை. நான் வழக்கு சொத்தில் வீடு கட்டி வசித்து வருவதற்கு வரி செலுத்தி உள்ளேனா என்றால் வரி செலுத்தி உள்ளேன். நீதிமன்றத்திற்கு தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். மின்சார அட்டையை நீதிமன்றதலல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பல வருடங்களாக வழக்கு சொத்தில் வசித்தும் எனக்கு ஏன் பட்டா தரவில்லை என்றால் நான் சென்று பட்டா கேட்கவில்லை.

2. என்னிடம் காட்டப்படும் வ.சா.ஆவணம் 1 என்ன என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தை யார் கொடுத்தார் என்றும் எனக்கு தெரியாது. என்னுடைய வீட்டிற்கும் பலராமன் என்பவரின் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 1 கல் தூரம். பலராமன் என்பவர் என் மீது செங்கல்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பலராமன் எனக்கு எதிராக OS No. 102/2020 என்ற வழக்கை தாக்கல் செய்து அவருக்கு ஆதரவாக 15/07/2022 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று சொன்னால் எனக்கு தெரியாது. பொன்னரங்கம் மற்றும் கமலகண்ணன் என்பவர்கள் யார் என்றால் என்னுடைய மகன்கள். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் எனது மகன்களால் போலியாக தாயார்

செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வ.சா.ஆ. 1 ஆவணமானது பழைய வருவாய் தாளை கொண்டு போலியாக நிரப்பி போலியாக முத்திரை போட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை எனது கணவர் அடமானம் வைத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் அடமானம் வைக்கவில்லை.

3. நான் வழக்கு சொத்தில் எப்போதும் அனுபவத்தில் இல்லை என்றும் அதனால் தான் வீட்டு வரி ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் 9 சென்ட் என்று குறிப்பிட்டத்தில் எதன் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் கிழக்கு பகுதியில் யார் உள்ளார் என்றால் வேறு யாரும் இல்லை. எனக்கு எல்லைகள் தெரியாது. எனக்கு வழக்கு சொரத்தில் உரிமை இல்லை என்றும் பிரதிவாதிகளுக்கு தான் உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**பிரதிவாதி வழக்கறிஞர் கேட்டு கொண்டுதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

S/d- N.Anupriya, 03.03.2025.
Taken down by me in open court read over in
the witness and admitted by the witness to be correct
DM cum JM/TPR.